# உலக காசநோய் தினம் 24.03.2019

**கவிதை கீழ்ப.பிரிவு – 1ம் இடம்**

## ''காசம் களையும் காலமிது''

எண்ணற்ற வாழ்வினிலே துன்பங்கள்,
ஏறெடுத்தும் பார்க்காத கண்விழிகள்
என்றாவது தீருமோ? என்று மனம்
எண்ணுகையில் வந்ததுவே நல்முடிவுகள்.

தொன்று தொட்டு வந்த இந்த நோயினிலே
தொட்டில் குழந்தை மட்டுமா?
வயது எல்லை வித்தியாசம் பார்த்தில்லை,
வந்ததுவே அதற்கொரு வழிவகைகள்.

காசம் வந்தது என் ஆயுளும் குறைந்தது,
கண் கெட்ட பின்பு சூரிய நமஸ்காரம்,
மனம் உழன்று உயிர் ஒன்று துடித்திடவே,
மலரொன்று கருகி உதிர்ந்து மடிந்திடவே.

சொல் கொண்டோம், துயர் கொண்டோம்,
சோறு, கண்ணீர் காணாது துவண்டோம்
இனியும் தாமதம் ஏன் என்றே
இனிப்பான செய்தி ஒன்று வந்ததுவே.

இருமி இருமி நெஞ்சுக் கூட்டினிலே,
இருண்ட புகை மண்டலங்களாய்,
இட்டார் விதி என்றும் வென்றதில்லை,
இனி இங்கு என்றும் துயரமில்லை.

காசம் களையும் காலமிதே,
காது குளிரும் நேரமிதே,
எம் நோய் தீர அருள்புரியவே
எங்கும் இன்பம் படர்ந்திடவே.

நோய் எண்ணி இங்கு நீ வருந்தாதே,
நோவினை என்று தினம் எண்ணாதே,
பிணி களையும் காலம் வந்ததுவே,
பிறிதொரு கண்ணீர் என்றும் வேண்டாமே.

புண்பட்ட நெஞ்சங்கள் பொன்னெனவே,
புத்துயிரும் கண்டு மனம் மகிழ்ந்ததுவே,
காசநோய் இனி எம்மில் இல்லையே,
காண்போம் இனி எம் வாழ்வில் இன்பமே.

பெயர் :- A.ஹனா
வகுப்பு:- 7 A
பாடசாலையின் முகவரி :- யாழ். வைத்தீஸ்வரா கல்லூரி

## உலக காசநோய் தினம் 24.03.2019

**கவிதை மேற்பிரிவு – 1ம் இடம்**

### காசம் களையும் காலமிது

வீசும் தென்றல் உள்மூச்சால்
வாச மலரின் மணம் வீச
தேசம் மலரும் நேரமிது
காசம் களையும் காலமிது.

பொல்லாக் கொடிய நோயெல்லாம்
போயகல வழியுண்டு
நல்லாய் அறிவுத் துணை கொண்டு
நலமாய் வாழ வழியுண்டு
சுத்தம் என்பது தினம் வேண்டும்
நித்தம் பேணும் நிலை வேண்டும்.

கண்ட இடத்தில் உமிழுவதும்
நிண்ட இடத்தில் சீறுவதும்
காற்றில் கிருமி கலந்தோட
ஏற்ற வழிகள் என்பீரே.

காசம் என்னும் கொடிய நோய்
காய்ச்சல் இருமல் சளியுடனே
மேலை வாட்டி மெலிதாக்கும்
மேவி உயிரை வலிதாக்கும்
மீள வழிகள் பலவுண்டு
மீட்கும் கருவி அறிவொன்றே.

வைத்தியர் காட்டும் வழி பற்றி
நித்தியம் மருந்துத் துணை பற்றி
தனிமை பேணி மற்றவர்க்கு
தன்னால் பரவா நிலை பேணி
வாழும் வழியைக் காண்பீரேல்
காசம் கலைந்து போய்விடுமே.

மக்களிடையே விழிப்புணர்வு
மருந்தின் மேலது என்பீரே
வருமுன் காக்க வழியண்டு
அரசின் திட்டம் பலவுண்டு
அறிவுப் பகிர்வும் பலவுண்டு
அறியும் செய்தி பலவுண்டு
அவற்றை வாழ்விற் பின்பற்றி
வாழப் பழகும் பண்பாட்டால்
நோய்கள் விலகும் நம்நாட்டில்.

காசம் களையும் காலமிது
கவனம் கொள்ளும் நேரமிது
நாமும் இணைந்து நடந்திட்டால்
நலமாய் வாழும் நம் நாடே.

பெயர் :- செல்வி மதுரா அருந்தவம்
வகுப்பு:- 10B
பாடசாலையின் முகவரி :- வேம்படி மகளிர் கல்லூரி

.

## உலக காசநோய் தினம் 24.03.2019

**கவிதை மேற்பிரிவு – 2ம் இடம்**

### காசம் களையும் காலமிது

பலதேசம் எங்கும் காற்றால்
பரவுகின்றது காசம் இன்று
பேச மறந்து நாமிருந்தால்
உயிர்கள் பல இறக்கின்றன

காலையில் வறட்டு இருமல்
மாலையிலோ காய்ச்சல்
பின் வருவதோ உடல் மெலிவு
அத்துடன் உடல் களைப்பும்

உணவில் நாட்டம் இன்றி
உருகியே மெலிந்து சென்றால்
சளி இருமலுடன் உதிரமும்
வரும்வேளை வைத்தியரை அணுகி

ஆறுதிங்கள் மருந்தினை நாம்
அனுதினமும் அருவியே வந்தால்
நோய் கண்ட எம் உடலும்
புத்துயிர் பெற்று வாழலாம்

கண்டகண்ட இடம்தனில் துப்பாவிட்டால்
போசணைமிக்க உணவுதனை உண்டாலும்
வேதனைமிக்க காசம் என்னும் நோய்
அணுகினும் அணுகாது எம்மிடம்

காசமற்ற தேசம் என்று நாம் பாரினில்
நேசமுடன் வாழ இன்றே
நிறுத்துகின்றேன் காசத்தை நான்
அறுத்து விடுவோம் காச விலங்கினை

வரம் தரும் மருந்துகளால் உரியசிகிச்சைக்கு
பூரண சுகவாழ்வு தனைக் கண்டு
காசமதன் ஊழியிலேயே அழியும்
காசமதனால் மானிட வாழ்வு மலரும்.

பெயர் : செங்கதிர்ச்செல்வன் வானதி
தரம் : 12
பாடசாலை : யா/இந்துமகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.